தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042, ஆவணி 28

2011 செப்டம்பர் 14, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு"

மிகுந்த செல்வ வளம் உடையதாய், எல்லாரும் விரும்பக்கூடியதாய், பெருந்துன்பம் வந்தாலும் எதிர்த்து வெற்றியைக் காணுவதாய் உள்ளதே சிறந்த நாடாகும்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

1. இரங்கல் தீர்மானம்

அரக்கோணம் பயணிகள் இரயில் விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரக்கோணம் பயணிகள் இரயில் விபத்து குறித்த இரங்கல் தீர்மானம்.*

"13-9-2011 செவ்வாய்க்கிழமை அன்று இரவு, சென்னையை அடுத்த அரக்கோணம் இரயில் நிலையம் அருகே சித்தேரி என்னும் இடத்தில் சிக்னலுக்காக நின்று கொண்டிருந்த பயணிகள் இரயில்மீது பின்னால் வந்த மின்சார இரயில் மோதியதால் ஏற்பட்ட கோர விபத்தில் 10-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது குறித்தும், சுமார் 80-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தது குறித்தும் இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இவ்விபத்தில் அகால மரணமடைந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும், அவர்களைப் பிரிந்து வருந்தும் உறவினர்களுக்கு

அனுதாபத்தையும், இவ்விபத்தில் காயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு ஆறுதலையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது. மேலும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைந்து வீடு திரும்ப வேண்டுமென்றும் இப்பேரவை விழைகிறது."

இத்தீர்மானத்தை நிறைவேற்றும்முகத்தான், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 4)@

1—

இடமாற்றம்

வினா எண் 1607—திரு. பொன். ராஜா: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதிக்குட்பட்ட தேவம்பேடு பகுதியில் உள்ள மதுபானக் கடையை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், தேவம்பேடு பகுதியிலுள்ள மதுபானக் கடை எண் 9105-ஐ பொதுமக்கள் ஆட்சேபனை செய்ததன்பேரில், 1-2-2011 நாளிட்ட திருவள்ளூர்

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.